**This Question Paper consists of 28 questions and 6 printed pages.**

**6** பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் **28** வினாக்கள் உள்ளன.

**Roll No.** | | | | | | | | | | | | |

**Code No. 64/SS/O/TM**

**SET A**

# TAMIL

# (தமிழ்)

# (304)

**Day and Date of Examination :** ______________________

(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி)

**Signature of Invigilators :** **1.** ______________________

(தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்)

**2.** ______________________

---

**பொதுக் குறிப்புகள் :**

**1.** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2.** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3.** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**4.** உங்களது வினாத்தாளின் Code எண் **64/SS/O/TM-A** விடைத்தாளில் எழுதுங்கள்.

# TAMIL

# (தமிழ்)

# (304)

**கால அளவு : 3 மணி நேரம் ]** **[ மொ. மதிப்பெண் : 100**

**பொதுக் குறிப்புகள் :**

(i) இந்த வினாத்தாள் பகுதி **'அ'** மற்றும் **'ஆ'** என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(ii) பகுதி **'அ'** -வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(iii) பகுதி **'ஆ'** -வில் இரண்டு விருப்பப் பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப் பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(iv) வினாக்களுக்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

## பகுதி - அ

**எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **1x17=17**

**ஓரிரு** சொற்களில் விடை தருக.

**1.** மூட்டைப்பூச்சி மருந்து குடித்தவன் என்ன ஆனான் ? **1**

**2.** உதிரம் - பொருள் தருக. **1**

**3.** தாயின் நெஞ்சக் கவலைகளை நிற்காமல் ஓட்டுவது எது ? **1**

**4.** மூன்று தமிழையும் ஓதியவர் யார் ? **1**

**5.** கோப்பெருந்தேவியின் சிலம்பு __________ பரல்களைக் கொண்டது. **1**

**6.** மிசை என்றால் என்ன ? **1**

**7.** பட்டறிவு – பிரித்து எழுதுக. **1**

**8.** 'கதவு' சிறுகதையின் ஆசிரியர் யார் ? **1**

9. மிகப் பெரிய தண்ணீர்ப் பறவைகள் சரணாலயம் எங்கு அமைந்துள்ளது ? **1**

10. தமிழில் தோன்றிய முதல் புதினம் எது ? **1**

11. முரளீதரனின் இலட்சியம் என்ன ? **1**

12. மலையும் மலை சார்ந்த இடமும் _________ எனப்படும். **1**

13. உவமைத் தொகைக்கு சான்று தருக. **1**

14. ஊரின் நீங்கினான் என்பது _________ வேற்றுமைத் தொகையாகும். **1**

15. பூங்குழல் என்பது _________ புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். **1**

16. அண்மைச் சுட்டு – சான்று தருக. **1**

17. ''Compact Disc'' -இச்சொல்லுக்கான தமிழ்ச் சொல் யாது ? **1**

18. **(அ) எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். **4x3=12**

(i) உண்டாலம்ம இவ்வுலகம் – விளக்குக.

(ii) 'பத்தியந்தரு' என்ற பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(iii) காலமறிதலின் தேவையை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

(iv) குறுந்தொகையைத் திணை அடிப்படையில் பிரித்து அவற்றின் எண்ணிக்கையை எழுதுக.

**(ஆ) எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். **4x3=12**

(i) ஏறுதழுவுதல் என்றால் என்ன ?

(ii) எலிகளைப் பிடிக்க பலர் கூறிய அறிவுரைகளை எழுதுக.

(iii) இசைக்கலையின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

(iv) இலக்கிய வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து எழுதுக.

**(இ) எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **4x2=8**

(i) தமிழகத்திலுள்ள குறிப்பிடத்தக்க நூலகங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

(ii) விளம்பரத்தின் நன்மைகள் யாவை ?

(iii) முத்துலெட்சுமி அம்மையார் பெண்களுக்காக உருவாக்கிய சட்டங்கள் யாவை ?

19. **குறிப்பு : ஒரு பக்க அளவில்** விடையளிக்கவும். **6x2=12**

**(அ) எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(i) தாய் எதற்காக வந்ததாகப் புத்தரிடம் கூறுகின்றாள் ?

(ii) கல்வியின் சிறப்புகளை நும் பாடப்பகுதியில் உள்ள புறநானூற்றுப் பாடல் மூலம் விளக்கியுரைக்கவும்.

(iii) 'நாடகத்தால்' என்று தொடங்கும் பாடலின் பொருளை விளக்குக.

(iv) 'யாரையோ நீ மடக்கொடியோய்' என வினவிய மன்னனுக்கு கண்ணகி கூறிய விடையைத் தருக.

**(ஆ) எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். **6x3=18**

(i) தமிழில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் குறித்து எழுதுக.

(ii) இலக்கிய வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து எழுதுக.

(iii) தமிழ் உலகச் செம்மொழி என்பது குறித்து எழுதுக.

(iv) தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டச் சுற்றுலாத் தலங்களின் தனித்தன்மைகளை விளக்குக.

(v) கலைவளர் திருநாள் தமிழர் திருநாள் என்பது பற்றி எழுதுக.

(vi) 'ஏன் முடியாது' நாடகத்தை கதை கரு சிதையாமல் விளக்குக.

**(இ) ஏதேனும் ஒரு** வினாவிற்கு விடையளிக்கவும். **6x1=6**

(i) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி செய்த பெண் முன்னேற்றப் பணிகள் குறித்து விவரிக்கவும்.

(ii) விளம்பரத்தின் நன்மை தீமைகளை விவரிக்கவும்.

## பகுதி - ஆ

## விருப்பப் பாடம் - I

## (இணையமும் தமிழும்)

20. மெயில்பாக்ஸ் என்பது _________. **1**

(அ) மின்னஞ்சல் பெட்டி (ஆ) விளையாட்டுப் பெட்டி

(இ) புத்தகம் (ஈ) மின்பொறி

21. தமிழில் இணையதளத்தை நடத்தியவர் யார் ? **1**

22. __________ என்பது கணினி மூலம் கடிதம் எழுதும் முறையாகும். **1**

23. Font என்பதன் தமிழ்ச்சொல் __________. **1**

24. பிணையம் என்றால் என்ன ? **1**

**குறிப்பு : ஏதேனும் ஒரு** வினாவிற்கு விடையளிக்கவும். **4x1=4**

25. தமிழ் கற்றல் தொடர்பான இணையதளங்கள் எவை ?

26. சென்னை நூலகம் – குறிப்பு வரைக.

**குறிப்பு : ஏதேனும் ஒரு** வினாவிற்கு விடையளிக்கவும். **6x1=6**

27. கணினி நவீன வாழ்வின் ஓர் அங்கம் – விவரிக்கவும்.

28. முகவருக்கு வேண்டிய பேச்சுத் திறன் எத்தகையது ?

## விருப்பப்பாடம் - II

## (மேலாண்மை இயலும் தமிழும்)

20. நிறுவன மேலாண்மை என்றால் என்ன ? **1**

21. உற்பத்தி மேலாண்மையின் அவசியம் பற்றி எழுதுக. **1**

22. தற்போதைய சூழலில் தொழில் நுட்ப மேலாண்மையின் அவசியம் என்ன ? **1**

23. வெவ்வேறு வகை நிகழ்வுக் குறிப்புகளைப் பட்டியலிடுக. **1**

24. தொகுக்கும் திறனுக்கு இன்றியமையாதன எவை ? **1**

**குறிப்பு : ஏதேனும் ஒரு** வினாவிற்கு விடையளிக்கவும். **4x1=4**

**25.** மனிதவள நிர்வாகத்தின் முக்கியப் பணிகள் யாவை ?

**26.** மேலாண்மையின் நிலைகளைப் பற்றிக் கூறுக.

**குறிப்பு : ஏதேனும் ஒரு** வினாவிற்கு விடையளிக்கவும். **6x1=6**

**27.** மேலாண்மை வகைகளை பற்றி விளக்குக.

**28.** நிறுவனம் ஒன்றிற்கு வேலை வேண்டி கடிதம் ஒன்று எழுதுக.

**- o O o -**